மீராவின் காதல்



கவிஞர் ச.கந்தசாமி

கவிஞர். ச.கந்தசாமி

மீராவின் காதல்

திருக்குறள் பேரவை, சென்னிமலை.

ஆண்டு : முதற்பதிப்பு - 2026

நூல் பெயர்: மீராவின் காதல்

நூல் அளவு : 1 x 8 (மெப்லித்தோ பேப்பர்)

ஆசிரியர் : ச.கந்தசாமி

வெளியீடு : திருக்குறள் பேரவை
சென்னிமலை
97889 04755

அச்சிட்டோர் : குறள் அச்சகம்,
ஈரோடு
8760382929

விலை : ரூ. 25.00

முனைவர் புலவர் ச.ந.இளங்குமரன்
தலைவர், வையைத் தமிழ்சங்கம்,
தேனி.

அணிந்துரை

காதலும் வழிபாடும் வேறுவேறல்ல; இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் பாவித்துத் தன் உயிரைச் சமர்ப்பிக்கும் 'தலைவன் - தலைவி முறைமை' (நாயக நாயகி பாவம்) தமிழரின் அருள் இலக்கிய மரபிலும் வடநாட்டு அருள் இயக்கத்திலும் மிக முதன்மையானது. வடபுலத்தில் கண்ணனின் காதலால் உருகிப் பாடிய மீராபாயின் ஆன்மத் தாகத்தைச் செந்தமிழின் சீர்மைமிக்க பாட்டு வடிவில் வடித்தெடுக்கும் முயற்சியாக இந்நூல் 'மீராவின் காதல்' திகழ்கிறது.

கண்ணனின் திருவடிகளில் தம் வாழ்வையே அர்ப்பணிக்கும் ஒரு பித்தி (பக்தை) எழுப்பும் அகக் குரலாக, 40 பாடல்களில் இந்நூல் விரிவடைகிறது.

தமிழ் அருள் இலக்கியத்தில் ஆண்டாள் திருவரங்கனை நோக்கிக் காதல் கொண்டு உருகியது போலவும், வடமொழியில் மீரா கண்ணனைக் காதலித்தது போலவும் இந்நூலின் ஆசிரியர் பாவலர் ச.கந்தசாமி அவர்கள் படைப்பாளருக்கே உரிய தன்மையில் தன்னைப் பெண்ணாக்கி கண்ணனின் பேரழகிலும் பேரருளிலும் திளைக்கிறார்.

"கண்ணாரக் காணுகின்றேன் கண்ணாவுன் லீலைகள்;
பெண்ணான என்னைப் ப தங்கொடுத்து - விண்ணாளும்
மன்னவனேமீட்டுவித்தாய்..." (பாடல் 5)

இவ்வடிகள், ஆண்டாள்நாச்சியார்திருமொழியில்:

"உன்னோடிருக்க வழக்கில்லை;
உயிரைப்பிரியப் பார்க்கின்றாய்..."

என்று உருகிய காதல் தவிப்பையும், பாரதியார் தம் கண்ணன்பாட்டில் :

"சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா - சூரியசந்திரரோ?
வட்டக் கரியவிழி - கண்ணம்மா! வானக் கருமை கொலோ?"

என்று பரம்பொருளைக் காதலனாகக் கண்டு வியந்த கவித்துவ மரபையும் நினைவூட்டுகின்றன.

உலகியல் மறந்து இறையியலில் கரைதல் காதலாகும்.

உலகப் பிணைப்புகளைத் துறந்து இறைவனை மட்டுமே புகலிடமாகக் கொள்ளும் ஆன்மீகச் செறிவை இந்நூலின் 13, 23 ஆகிய பாடல்கள் அழகாகப் புலப்படுத்துகின்றன.

"மனைமறந்தேன் மண்ணை மறந்தேன்;... நான் பாடும் இசைப்பாட்டு
தேருக்குள் ஏற்றுமெனத் தேர்ந்து." (பாடல் 13)

"பித்தாகிப் போனதாய் மக்கள் பிதற்றுகின்றார்;
முத்தாகிப் போனேன்நான் மூழ்கியுன்னுள்..." (பாடல் 23)

இப்பாடல்கள், உலகத்தாரால் பித்தர் என்று தூற்றப் பெற்றும் இறை அன்பில் திளைத்த மாணிக்கவாசகரின் திருவாசக வரிகளான:

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்..."

என்ற வரிகளோடும், மீராபாயின் புகழ்பெற்ற அருட்பாடலான "மேரே தோ கிரிதர் கோபால், தூஸ்ரா ந கோயீ" (எனக்குக் கிரிதர கோபாலனைத் தவிர வேறு யாருமில்லை) என்ற முழுச் சரணாகதிக் கோட்பாட்டோடும் மிக நெருக்கமாக ஒத்துப்போகிறது.

இவ்வுலகில் படைக்கப்பட்ட உயிர்கள் யாவும் பெண்களே; ஒரே ஆண் பரம்பொருளாகிய கண்ணன் மட்டுமே என்னும் அத்வைத / அருட்கோட்பாட்டை 12 - ஆம் பாடல் நயம்படக் கூறுகிறது:

"இருப்பெல்லாம் பெண்தானே இவ்வுலகில் ஆணாய்
இருப்பதுநீ மட்டுமன்றோ இங்கு." (பாடல் 12)

இது தமிழ் அருள் மரபில் நம்மாழ்வார் தலைவி முறைமையில் பாடிய பாசுரங்களின் தத்துவச்செறிவையும், விவேகானந்தர் குறிப்பிடும் "உயிருக்கு ஆண் பெண் பாலினம் இல்லை; இறைவனே ஏகப்புருசன்" என்ற வேதாந்த உண்மையையும் கவிதை வடிவில் வெளிப்படுத்துகிறது.

இந்நூலில் எளிமையும் இனிமையும், பாமரரும் படித்து உணரும் வண்ணம் மிகஎளிமையான, சந்தநயம் மிக்க தமிழ்ச்சொற்களால் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. "ஆராஅமுதாய்", "கருநீலவண்ணா", "மாலேமணிவண்ணா" போன்ற சங்கத் தமிழ் மற்றும் திவ்யப்பிரபந்தச் சொற்களின் பயன்பாடு பாடல்களுக்கு அருள் மணத்தைச் சேர்க்கிறது.

இப்பாடல்கள் அனைத்தும் வெண்பா வடிவில், எதுகை - மோனை நயங்களுடன் ஓசை நயம் சிறந்து விளங்குகின்றன.

‘மீராவின்காதல்’ என்னும் இந்நூல் வெறுமனே வார்த்தைகளால் ஆன கவிதைகளின் தொகுப்பன்று; அது ஓர் உயிர் பரம்பொருளை நோக்கிய தேடலில் அடையும் ஆனந்தத்தையும், தவிப்பையும், இறுதியான சரணாகதியையும் விவரிக்கும் அருட்பிரவாகம்.

பாரதியின் கண்ணன் பாட்டு, ஆண்டாளின் திருப்பாவை/நாச்சியார் திருமொழி மற்றும் மீராபாயின் வழிபாட்டுப் பாடல்களின் சாரத்தை ஒருங்கே திரட்டித் தரும் ஒரு நல்லெண்ண முயற்சியாக இந்நூல் அமைகிறது. தமிழ் அருள் இலக்கியவானில் இந்நூல் வாசகர்களின் மனத்தைக் கொள்ளை கொள்ளும் ஒரு எளிய, அழகிய படைப்பாகும். வாழ்க ஐயா பாவலர் ச.கந்தசாமியார்.

இனிய அன்புடன்
முனைவர் புலவர் ச.ந.இளங்குமரன்

"செம்மொழிச் செம்மல்"
புலவர். பெ.திருவள்ளுவர், எம்.ஏ., எம்.எட். எம்.ஃபில்.,
தலைவர், திருக்குறள் பேரவை.
சென்னிமலை.

35, பிராட்டி அம்மன் கோவில் தெரு,
சென்னிமலை 638 051.

வாழ்த்துரை

வாழ்த்துதல் என்பது ஒருவினை செய்தவரை அல்லது வினையின் வழி உண்டான ஒன்றைப் பாராட்டுவதாகும். அது படைப்பாளியைப் பாரறியச் செய்யும்; அவரின் படைப்பின் அரும்பெரும் சிறப்பை உலகறியச் செய்யும்.சங்க காலத்தின் தொடக்கத்தில் வாழ்த்துதல் என்பது ஒரு நூல் மரபாக காணப்படவில்லை. பின்னர் வாழ்த்து, கடவுள் வாழ்த்து என்று சேர்க்கப்பட்டு நூல் எழுதும் மரபு உண்டானது. சிலம்பின் ஆசிரியர் இளங்கோ அடிகள் அதை மாற்றி,

திங்களைப் போற்றுதும்.....
ஞாயிறு போற்றுதும் .....
மாமழை போற்றுதும்...

என்று உலகில் உயிர் வாழ இன்றியமையாத மூன்றை வாழ்த்தி நூலைத் தொடங்கியுள்ளார்.

வான்புகழ் வள்ளுவர் 133 அதிகாரத்தில் முதலாவதாகக் கடவுள் வாழ்த்து எழுதியுள்ளார். அப்பகுதியில் உள்ள பத்துக் குறட்பாக்களில் எந்தக் கடவுளையும் வெளிப்படையாகக் குறிப்பிடாமல், சமயப் பொது நோக்கு உடையவராக, உலகப்பொதுமறை என்று உலகத்தவர் ஏற்கும்படியாக யாத்தளித்துள்ளார்.

"எழுதிய பொழுதில் பெரிதுவக்கும் தனதுநூல்
தரமானது எனக்கேட்ட எழுத்தாளன்"

என்ற மாண்பமை அடிகளை மனதில் ஆழப்பதித்து "மீராவின் காதல்" என்ற இக்கவிதை நூலைக் கவிஞர் ச. கந்தசாமி எழுதியுள்ளார்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு" குறள் எண் - 383

என்ற குறளுக்கு இலக்கணமான வாழ்வாங்கு வாழ்ந்து வரும் கவிஞரின் அருமுயற்சியால் வெளி வரும் ஆறாவது நூலாகும் இது. வாழ்த்துப்பாடல் தவிர்த்து 40 வெண்பாக்காளால் உருவாக்கிய கவிமாலையைக் காதலி மீராவுக்கு அணிவித்து ஆனந்தம் அடைந்துள்ளார் .

இலக்கியம் சார்ந்த, குறிப்பாகத் திருக்குறள் நெறி வளர்ச்சிக்கு முதலிடம் அளித்துப் பண்பார்ந்த இளைஞர்களை உருவாக்கிவருகிறார். பள்ளி கல்லூரி மாணவ மாணவியர், ஆசிரியப்பெருமக்கட்குப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதன் வழி, தமிழார்வத்தை நாளும் தூண்டிவரும் தூயவர் இந்நூலாசிரியர் கவிஞர் ச.கந்தசாமி என்றால் மிகையாகாது. காதல் மென்மையானது, புனிதமானது, அதிலும் ஆழமானது அதிலும் அடியவர் ஆண்டவன் மீது கொள்ளும் உயர்நெறிக்காதல் மிக உன்னதமானது. அதனால் தான் ஞானசம்பந்தப்பெருமான் தனது தேவாரத்தில்,

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
---------நமச்சிவாயவே என்று நெக்குருகப் பாடினார் .

இதன் அடிப்படையில் எழுதப்பட்ட "மீராவின் காதல்" என்ற இந்நூலின் ஒவ்வொரு வெண்பாவும் ஆழ் பொருள் உடையதே. கற்பனை வளம், கவிதை ஓட்டம் பரவலாகக் காணப்படுகிறது .குறிப்பாக இந்நூலின் எட்டாவது பாடலில் "விழுமியங்கள்" என்ற சொல்லாட்சி வியந்து போற்றுதற்குரியதாகும். 9 ம் பாடலில்

‘உனக்கோர் உறவாக வேண்டுமென்றே நானும்
எனக்கோர் பிறப்பிங்கு எடுத்தேன்.’

என்று தான் பிறப்பெடுத்தமைக்கான காரணத்தைக் கூறியது மிக அற்புதமாக உள்ளது .
எந்தவொரு செயலுக்கும் -அந்தச் செயலைச் செய்து முடிக்கும் ‘வேகம் தேவை’ என்ற கருத்தில்
13 -ம் பாடலில்

‘வினை மறந்த பேருக்கு
வெற்றியில்லை’ என்று குறிப்பிட்டுள்ளார்.

பாடல் எண் -17 -ல்

“எட்டா உயரத்தில் எங்கோ தொலைவினில்
கிட்டா திருக்கும் கனிஎன்றார் - முட்டாள்கள்”

-என்று கடவுள் மறுப்பாளர்களை மிகக் கடுமையாகச் சாடியுள்ளது இவரது இறைப்பற்றுக்கு மிகப்பெரும் சான்றாக உள்ளது.
பாடல் எண்-26-ல்

“பெரிதினும் மாணப் பெரிதெனக் குந்தன்
அரிதினும் அரிதா மருள்”

என்ற தொடர் பெரிது அரிது என்ற இரண்டு சொற்களின் சொல்லாட்சியைத் தெளிவுறக்காட்டி, வியத்தகு ஓசை நயத்தையும் வெளிப்படுத்துகிறது.

பொதுவாகவே புலவர்கள், கவிஞர்களில் முத்தத்தை விரும்பாதவர்களும், போற்றாதவர்களும், எடுத்தாளாதவர்களும் இல்லையெனலாம்.
அந்த முறையில் பாடல் எண் 35 ல்

"முத்தமொன்று வேண்டும் முகுந்தாயென் கன்னத்தில்
சத்தமின்றித் தாயேன் தனித்திருப்பேன்"

என்ற தொடர் காதலின் மென்மை, காதல் பரிசாக முத்தம் பெற விரும்பும் நயம், படிப்பவர்க்கும், உணர்பவர்க்கும் பேரானந்தமாகும்.

கற்கண்டுக்கட்டியினை எப்பகுதியில் எப்படிக் கடித்தாலும் அதன் சுவை அப்படியே இருக்கும். அதுபோல "மீராவின் காதல்" என்ற நூலை எந்த நோக்கத்தில் படித்தாலும் காதலின் நெருக்கம், கவிச்சுவை என்றுமே எள்ளளவும் எவர்க்கும் குன்றாது. ஆண்டாள் மீது பாடப்பட்ட தரமான நூல்களின் வரிசையில் இவரது இந்நூல் இடம் பெறுவது திண்ணம். அத்தகு நூலைப்படித்து ஆழ்பொருளுணர்ந்து மகிழ்வது, மகிழச்செய்வதும், நமது கடமை. நூலாசிரியர் ஆட்சிப்பணியிலும், எழுத்துப்பணியிலும் மேலும் உயர்ந்திட வாழ்த்துகிறேன் .

"காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே !
எந்தக்காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே"!

என்று பாராட்டப்படும் பைந்தமிழெனச் சிறந்து, உலகப்பொதுமறை என உயர்ந்து வாழிய! வாழியவே!

இனிய அன்புடன்
புலவர். **பெ.திருவள்ளுவர்**

மீராவின் காதல்

கண்ணா; கருணா கரனே; கருநீல
வண்ணா வருக யெனைவாழ்விக்க - எண்ணாத
நாளில்லை உன்னழகை நாயகனே; நீயின்றி
நானில்லை என்னோடு நில். 1

ஆடியும் பாடியும் ஆனந்த மாயிரு;
கூடி மகிழ்வுடன் கொண்டாடு; - நாடி
நலம்புரியும் நாயகன் நாரணன்கை கொண்ட
வலம்புரிச் சங்கை வணங்கு. 2

நாவி லினிப்பதும் நாத வொலியதும்
பூவிதழ் வண்ணமாய்ப் பார்ப்பதும் - மேவிய
காற்றாய் முகர்வதுமென் கண்ணனெனக் கண்டவனை
ஏற்றே இருந்தேன் இசைந்து. 3

நீலவண்ணக் கண்ணாயென் நெஞ்சத்தில் நீங்காது
கோலமயில் போலக் குடியிருக்கும் - மாலவனே;
என்னுடைய மூச்சிலும் என்னுடைய பாட்டிலும்
உன்னுடைய இன்னருள்தா னுண்டு. 4

கண்ணாரக் காணுகின்றேன் கண்ணாவுன் லீலைகள்;
பெண்ணான என்னைப் பதங்கொடுத்து - விண்ணாளும்
மன்னவனே மீட்டுவித்தாய்; மின்னும் உனதருளைக்
கன்னலெனக் கொள்வேன் கனிந்து. 5

மாலே மணிவண்ணா; மாதவத்தால் சேயுனக்குத்
தாலேலோ பாடவந்தேன் தாயாகி - ஏழேழ்
பிறவிக்கும் நீயெந்தன் பாலகனே; உந்தன்
உறவெனக்கு உய்யும் வழி 6

ஆரா வமுதாய் அகங்குளிர வைத்திட்ட
சீரார் வனத்துச் சிறுவனே! - வாராது
வந்திலங்கும் மாமணியே வாசுதேவ மைந்தனே
தந்தி டெனக்குந்தன் தாள். 7

பாடித் துதிக்கின்றேன் பார்த்தனின் சாரதியை
ஆடிக் களிக்கின்றேன் அன்னவனை - தேடிக்
குழுமுகின்ற கூட்டத்தில், கண்ணனவன் காட்டும்
விழுமியங்கள் வாழ்வில் விழைந்து. 8

உனக்கோர் உறவாக வேண்டுமென்றே நானும்
எனக்கோர் பிறப்பிங்(கு) எடுத்தேன் - எனக்கே
எனக்கான கண்ணனே, என்றெனையாட் கொண்டென்
மனக்காயம் தீர மொழி. 9

அகத்தில் ஒலிக்கின்ற அன்பெனும் கீதம்;
சகத்தை வழிநடத்தும் சந்தம் - இகத்தைக்
கடக்க உதவும் கருணைக் கடலாய்க்
கிடக்குமென் கண்ணனேயென் காப்பு. 10

உண்ண மறந்தேன்; உறங்க மறந்தேனென்
எண்ணமெல்லாம் நீயே யிருக்கின்றாய் - கண்ணனே
பேதை யெனக்குப் புதுவாழ்விற் கானதொரு
பாதையினைக் காட்டேன் பரிந்து. 11

பெண்ணாய்ப் பிறந்ததாலுன் பின்னால் வருவதாய்
எண்ணாதே அன்பால் எனையாளும் - கண்ணா;
இருப்பெல்லாம் பெண்தானே இவ்வுலகில் ஆணாய்
இருப்பதுநீ மட்டுமன்றோ இங்கு. 12

எனைமறந்து பாடுகின்றேன் எப்போதும் உன்னை;
மனைமறந்தேன் மண்ணை மறந்தேன்; - வினைமறந்த
பேருக்கு வெற்றியில்லை; நான்பாடும் சங்கீதம்
தேருக்குள் ஏற்றுமெனைத் தேர்ந்து. 13

எம்மையுன் கையில் எடுத்தாளும் தோற்பாவைப்
பொம்மையைப் போலத்தான் பார்க்கின்றேன் - பொம்மையைக்
கொண்டேயுன் பாடலைச் சொல்லவைக் கின்றாய்நீ;
கண்டேனுன் ஆட்டம் கனிந்து. 14

எங்கு மிருக்கின்றான்; என்மன்னன் கண்ணனவ
னிங்கு மிருக்கின்றான் இப்போதும்; - தங்கு
தடையில்லா மல்கிளம்பும் கேள்வி களுக்கு
விடையெல்லாம் அன்ன வனே. 15

வலியுடன் வந்த உயிர்களுக்குன் அன்பால்
நலிவுடன் நீக்கி நலம்தா;- பொலிவுடன்
ஞாலம் புரப்பதற்கே ஞானப் பெருவிளக்கே
மூலப் பொருளாய் மிளிர்ந்து. 16

எட்டா வுயரத்தில் எங்கோ தொலைவினில்
கிட்டா திருக்கும் கனியென்றார் - முட்டாள்கள்;
தொட்டாலும் விட்டாலும் தோன்றுவது நீயேநான்
கெட்டாலும் உன்னடிதான் காப்பு. 17

பாடெனச் சொன்னதும் பாடலைத் தந்ததும்
ஆடெனச் சொன்னதும் ஆடியுனைக் - கூடெனச்
சொன்னதும் கோகுலச் செல்வநீயே; இவ்வுலகில்
என்னதென் றிங்கிருப்ப தேது. 18

கண்ணா கருணைக் கடலே! வெகுநாள்நான்
உண்ணாமல் கூடவுயிர் வாழ்வேன் - எண்ணாமல்
வாழ்வதற்கு ஏலா துனதருளை; உன்னடியைத்
தாழ்வதனால் நின்றேன் தழைத்து. *19*

உன்னைத் தவிரநான் வேறொன்றைக் கைதொழேன்;
உன்னைத் தவிரவும் வேறொன்றும் இங்கில்லை
யாதலால் ஏதொன் றிலும்உனையே கண்டுணர்ந்து
காதலாகி நின்றேன் கலந்து. *20*

நந்தவனக் காற்றில் நறுமண மாய்த்திகழும்
நந்த குமாரனே! நாரணனே! - பந்தமெனக்
கொண்டதெல்லாம் உன்னருளே கோபாலா! கோகுலம்போல்
அண்டமெல்லாம் உய்த்தே யருள். *21*

பாடுகின்ற பாட்டின் பொருள்நீயே நானிங்கு
நாடுகின்ற மெய்ப்பொருளும் நீயேதான் - கூடுகின்ற
கூட்டத்தில் கும்மாளம் சேர்வதுபோல் நல்லோர்தம்
நாட்டத்தில் நிற்பவனும் நீ. 22

பித்தாகிப் போனதாய் மக்கள் பிதற்றுகின்றார்;
முத்தாகிப் போனேன்நான் மூழ்கியுன்னுள்; - செத்தாலும்
மாறாது பித்தெனக்கு; மாயோனே வேறோன்றைச்
சேராதென் நெஞ்சம் சலித்து. 23

பெண்ணாய்ப் பிறந்திங்குப் பேதையென வாழ்ந்தவளை
மண்ணா யிருந்தவளை மாற்றிவிட்ட- கண்ணா
கருணா கரனே கருமேக வண்ணா
வருநோ யெலாம்தீர்க்க வா. 24

நிரந்தரம் உந்தன் நினைவெனக்கு; வேண்டும்
வரம்தர வாயென்றேன் வந்தாய் - பரம்பொருளே
பைந்தமிழில் பாடிப் பணிகின்றேன் உன்புகழை;
நைந்தயென் நோயனைத்தும் நீக்கு. 25

வெல்வதற் கொன்றுமில்லா வேந்தரும் வேண்டுகின்ற
செல்வம் பெரிதெனச் சொல்பவர்க்குச் சொல்வேன்
பெரிதினும் மாணப் பெரிதெனக் குந்தன்
அரிதினும் அரிதா மருள். 26

மாடுமனை சுற்றமும் மன்னவனின் கொற்றமும்
வீடுபிற செல்வமும் விட்டுவிட்டு - பாடுயெனை
என்றாய் பணிந்துனை ஏற்றதுமென் ஆணவத்தைக்
கொன்றாய்வை குந்தம் கொடுத்து. 27

கண்ணில் தெரிந்தாய் கனவிலும்நீ நிற்கின்றாய்
மண்ணில் இருப்பதெல்லாம் மன்னாநீ - விண்ணில்
விளங்குகின்ற கண்ணா, வணங்கு மெனக்கு
களங்கமற்ற நெஞ்சம் கொடு. 28

துன்பம் துடைத்தருளும் தூய ஒளிச்சுடரே;
அன்பர்க் கருளும் அரங்கனே! - இன்பம்
வழிந்தோடும் உன்பெயரை உச்சரித்தால் கண்ணா;
அழிந்தோடும் தீமை அகன்று. 29

எனக்கொரு சொந்த மெனவந்தாய் கண்ணா;
மனக்குறை எல்லாமும் மாற்றி - உனக்கொரு
நல்ல பணிப்பெண்ணாய் நானுன்னைச் சீராட்டும்
வல்லமையைத் தந்தென்னை வாழ்த்து. 30

பார்த்தாலும் போதும் பரந்தாமா; உன்னோடு
சேர்த்தாலும் நான்மறுப்பா சொல்லிவிடப் போகின்றேன்;
உன்னையே எண்ணி உலகைத் தொலைத்துவிட்டேன்
என்னையும் கண்பாரேன் ஏற்று. *31*

உன்னைச் சரணடைந்தேன் உன்னருளைத் தந்துவிட்டாய்
உன்னில் தொலைந்தே வொளியானேன் - என்னை
எனக்குத் தெரியவில்லை எங்குமுன் வாசம்
மணக்குதெனக் கண்டேன் மகிழ்ந்து. *32*

வேதனைகள் தீர்க்குமுந்தன் வேணுகானம் கேட்பதற்குச்
சோதனைகள் தாண்டியுனைச் சேர்ந்துவிட்டேன் கோபாலா;
ஞாலத் திருளகற்றும் ஞானஒளிக் கீற்றேயுன்
கோலத் திருவடியென் காப்பு. *33*

ஆடாக நானும் அலைந்து திரிந்துவந்தேன்
காடாளும் சிங்கமெனக் காட்டிவிட்டாய்; - ஓடாகத்
தேய்ந்தாலும் உன்னடியில் தானிருப்பேன்; செந்தீயில்
தீய்ந்தாலும் நீயே துணை. *34*

முத்தமொன்று வேண்டும் முகுந்தாயென் கன்னத்தில்
சத்தமின்றித் தாயேன் தனித்திருப்பேன்;- நித்தமும்
வந்தெனக்குத் தந்திட்டால் உய்ந்திடுவேன்; என்வாழ்வை
உந்தனுக்கே தந்தேன் உவந்து. *35*

எண்ணிலும் உள்ளாய் எழுத்திலும் உள்ளாயென்
கண்ணிலும் உள்ளாய்; கருத்திலும் நீயேதான்
உள்ளாய்; கருநீல வண்ணத்தில் காட்சிதரும்
பிள்ளாய் பரிந்தென்னைப் பார். *36*

காட்சியும் நீயேயென் கண்ணா யிருந்தெனை
ஆட்சியும் செய்கின்றா யாரமுதே; - மீட்சியும்
உன்னாலே தானென்றென் உள்ளத்தைத் தந்துவிட்டேன்
மன்னாவுன் அன்பில் மகிழ்ந்து. 37

பொய்யாம் உலகைப் புறந்தள்ளிக் கண்ணாவுன்
மெய்யாம் அருளில் மகிழ்ந்திருக்க நான்விழைந்தேன்;
அய்யாவுன் பார்வை அடைமழையாய் நில்லாமல்
பெய்யாதோ என்மேல் பரிந்து. 38

எங்கேநான் சென்றாலும் ஏதேது செய்தாலும்
அங்கேநீ அன்பா இருக்கின்றாய் - இங்கேநான்
நானாய் இருப்பதற்கும் நீயேதான் காரணமென்
றானாய் எனையுனதா ளாக்கு. 39

தூயவனே; துன்பம் தொலைக்கவந்த கோகுலத்துச்
சேயவனே பன்மாயம் செய்கின்ற - மாயவனே
வெண்ணை திருடுகின்ற பாலகனே என்னகக்
கண்ணைத் திறக்கவழி காட்டு. *40*

ஆசிரியர் குறிப்பு :

- ச.கந்தசாமி, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர், திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்தவர்.
- தந்தை சங்கரசுப்பு, தாயார் மல்லிகா.
- தமிழ் இலக்கியத்திலும், பொது நிர்வாகத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றவர்.
- தமிழ்நாடு மாநில குடிமைப் பணி அலுவலராக பணியாற்றியவர். 2024ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று இந்திய ஆட்சிப்பணி (I.A.S) அலுவலராக பணியாற்றிவருகிறார்.

ஆசிரியரின் பிற நூல்கள்

1. சென்பா நாற்பது – கீதம் பதிப்பகம்
2. மகளாற்றுப்படை – சுடர்விழி பதிப்பகம்
3. அகநக (வெண்பா விருந்து) – கோரல் பதிப்பகம்
4. சென்னிமலை வெண்பாமாலை – திருக்குறள் பேரவை
5. பண்ணாரி நாயகி – திருக்குறள் பேரவை
6. குருவடி! திருவடி! – திருக்குறள் பேரவை

‘மீராவின் காதல்’ என்னும் இந்நூல் வெறுமனே வார்த்தைகளால் ஆன கவிதைகளின் தொகுப்பன்று; அது ஓர் உயிர் பரம்பொருளை நோக்கிய தேடலில் அடையும் ஆனந்தத்தையும், தவிப்பையும், இறுதியான சரணாகதியையும் விவரிக்கும் அருட்பிரவாகம்.

முனைவர் புலவர் ச.ந.இளங்குமரன்
தேனி

கற்கண்டுக்கட்டியினை எப்பகுதியில் எப்படிக் கடித்தாலும் அதன் சுவை அப்படியே இருக்கும். அதுபோல “மீராவின் காதல்” என்ற நூலை எந்த நோக்கத்தில் படித்தாலும் காதலின் நெருக்கம், கவிச்சுவை என்றுமே எள்ளளவும் எவர்க்கும் குன்றாது.

புலவர். பெ.திருவள்ளுவர்
சென்னிமலை.